கிராமின் கிருஷி ம aus சம் சேவா
இந்தியா வானிலை ஆய்வு துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

தேதி : 29-07-2022

புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-07-29 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)

| வானிலை காரணி | 2022-07-30 | 2022-07-31 | 2022-08-01 | 2022-08-02 | 2022-08-03 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 2.0 | 4.0 | 18.0 | 14.0 | 8.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 35.0 | 35.0 | 34.0 | 35.0 | 35.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 27.0 | 27.0 | 25.0 | 26.0 | 27.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 75 | 75 | 75 | 75 | 75 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 65 | 65 | 65 | 65 | 65 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 10.0 | 12.0 | 10.0 | 16.0 | 10.0 |
| காற்றின் திசை (கோணம்) | 200 | 200 | 320 | 320 | 250 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 5 | 7 | 5 | 4 |

### வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

ஆகஸ்ட் 01 மற்றும் 02 தேதிகளில் மிதமான மழைக்கும் மற்ற நாட்களில் லேசான மழைக்கும் வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 35.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 25.0°C - 27.0°Cவேறுபாட்டிலும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 10 - 16 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

### பொது ஆலோசனை:

விரிவாக்கப்பட்ட வரம்பு மழை முன்னறிவிப்பு : ஆகஸ்ட் 07 முதல் ஆகஸ்ட் 14 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடுட்டில் இயல்பிற்கு மேல் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது . அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பிற்குக் கீழே மிதமானது இருக்கும்.

### குறுஞ்செய்தி :

மழை எதிர்பார்க்கப்படுவதால் நெல் மற்றும் தோட்டக்கலை பயிர்கள் காய்கறிகள் ,மற்றும் தென்னை பயிரிடுவதற்கான ஆரம்ப வேளை செய் ஏற்ற தருணம் .

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | தற்போது நிலவும் பரு சூழ்நிலையில் காரணமாக நெற்பயிரில் இலை சிலந்தி தாக்குதல் பரவலாக தென்படுகிறது . இதனை கட்டுப்படுத்த டைகோபால் 2.5 மில்லி/லிட்டர் அல்லது பெனாஷகுயின் 10 இ.சி 2மில்லி /லிட்டர் என்ற அளவில் தண்ணீரில் கலந்து தெளிக்கவும் . |
| நிலக்கடலை | வைகாசி பட்டத்தில் நிலக்கடலை விதைப்பு மேற்கொண்ட விவசாயிகள் செடியில் விழுதுகள் அதிகமாக பிடிக்க ஜிப்சம் இட்டு (160 கிலோ / ஏக்கர்) மண்அணைக்க வேண்டும். மேலும், நிலக்கடலை செடியில் அதிக காய்கள் மற்றும் மகசூல் பெற இலைவழி தெளிப்பு உரமாக நிலக்கடலை ரிச் என்ற நுண்ணூட்டட் கலவையை (2 கிலோ / 200 லிட்டட் ர் ) ர் தெளிக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | இதுவரை மழை பெறப்பட்ட பகுதிகளில் தென்னைக்கு உரமிடலாம் . இதுவரை மழை பெறப்படாத பகுதிகளில் எதிர்பார்க்கும் மழையை பயன்படுத்தி உரமிடுதலுக்கு தயாராகலாம் . தென்னைக்கு உரமிட மரத்திலிருந்து 1.8 மீட்டர் தள்ளி அரை வட்ட வடிவில் குழி எடுக்கவும். பொதுவாக உரமிடுதல் ஜூலை மற்றும் அக்டோபர் நவம்பர் மாதங்களில் வைத்துக்கொள்ளவும் . தோப்பில் 5 வயதிற்கு மேலுள்ள ஒரு மரத்திற்கு 650 கிராம் யூரியா 1 கிலோ சூப்பர் பாஸ்பேட், 1 கிலோ பொட்டாஷ் கலந்து உரமிடவும் . |
| தென்னை | நிலவும் தட்பவெப்ப சூழ்நிலையின் காரணமாக தென்னை பயிரைத் தாக்கும் தஞ்சாவூர் வாடல் நோய் வர ஏதுவாக உள்ளது. ஜூலை முதல் நவம்பர் மாதத்தில் இந்த நோய் வேகமாக பரவுகிறது. ஓலைகள் மஞ்சள் நிறமடைதல், வெளிச்சுற்று இலைகள் தொடங்கி விடுதல் ஆகியவற்றுடன் தொடங்குகிறது .அதைத் தொடர்ந்து தண்டின் அடிப்பாகத்தின் வெடிப்புகள் வழியாக செஞ்சிவப்பு நிற சாறு கசிந்து ,அது மேல் நோக்கி பரவும் .கசியும் பகுதியில் உள்ள திசுக்கள் மென்மையாக இருக்கும் .சாறு கசியும் பகுதியில் உள்ள திசுக்கள் அழுகி ,தண்டின் அடிப்பகுதியும் அழுகிவிடும் .இதனைக் கட்டுப்படுத்த 2 மி.லி ஹெக்சகோ கோசல் உடன் 100 மிலி தண்ணீர் கலந்து வேர் மூலம் (3 மாத இடைவெளியில் 3 முறை ) செலுத்தலாம் . |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கால்நடை வளர்ப்பில் மிக முக்கியமாக பிறந்த கன்றுகளுக்கு பசுவின் சீம்பால் மிகவும் அவசியமாகும். புதிதாகப் பிறந்த கன்றுக்கு, முதல் மூன்று நாட்களுக்கு, தவறாமல் பசுவின் சீம்பால் ஊட்ட வேண்டும். ஒரு நாளைக்கு 2 முறை சீம்பால் கொடுக்கலாம். கன்றுக்குட்டி பலவீனவீ மாக இருந்தால், ஒரு நாளைக்கு 3 முறை சீம்பால் கொடுக்கலாம். இது கன்றுக்குட்டியின் உடல் வெப்பநிலையை சூடாக வைத்திருக்கவும் ஆரோக்கியமான வளர்ச்சியை ஊக்குவிக்கவும் செய்கிறது. பசு மாடுகளுக்கு நீர்த்த சுண்ணாம்பு சத்துள்ள நீர் 75 மில்லி அளவு தினமும் அடர் தீவனம் நீர் கலவையில் கலந்து குடிக்க கொடுத்து பால் உற்பத்தி அதிகரிக்கலாம் |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | தற்போது தென்மேற்கு பருவமழை காலம் தொடங்கி அதன் தாக்கம் தற்போது தமிழத்தின் மீதும் காணப்படுவதால், மழைக்கான வாய்ப்பும் , பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் குறைந்து காற்றின் வேகம் கூடுதலான வானிலை நிலவும் . இதன் காரணமாக கோழிகளில் உற்பத்திக்கான சாதகமான சூழ்நிலை நிலவும் . புதிய வரவு மக்காச்சோளம் மற்றும் இதர தீவன பொருட்களை கொள்முதல் செய்யும் போது , அவற்றின் ஊட்டச்சத்துக்கள் மற்றும் பூஞ்சாணங்கள் அளவுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் அதிக அளவு பூஞ்சாண நச்சுக்கள், கோழிகளின் நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைத்து நோய்களுக்கு வழி வகுத்துவிடும் . |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | அடுத்த சில நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதால் ஆடி பட்டத்திற்கான விதைப்பு மற்றும் நடவு பணிகளை மேற்கொள்வோம் |
| பொது ஆலோசனை | ஆடி பட்டம் காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகள் காய்கறி பயிர்களை தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்த ஏக்கருக்கு சூரிய விளக்கு பொறி 1 எண், மஞ்சள் ஒட்டுட்ம் அட்டை 8 எண், இனக்கவர்ச்சிப் சிச் பொறியை 8 எண் மற்றும் டிரைக்கோடெர்மார் விரிடி 1 கிலோவை 500 கிலோ தொழு உரத்துத் டன் கலந்து கடைசி உழவின் போது இடுவதன் மூலம் கட்டுட் ப்படுத்தலாம். |